# புனித அல்போன்சா நவநாள் செபம்

முத : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...
எல் : ஆமென்.

முத : உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக!
எல் : உலகினிலே நன்மனத்தோருக்கு அமைதி ஆகுக!

முத : மன்றாடுவோமாக!

எங்கள் ஆண்டவராகிய இறைவா, எங்களைப் படைத்துப் புனிதப்படுத்தி மீட்படையச் செய்த நீர், ஆராதனைக்கும், புகழ்ச்சிக்கும், மகத்துவத்திற்கும், மாட்சிமைக்கும் உரியவர். நாங்கள் புனிதத்தின் பாதையில் நடக்கவும், உம்மில் அடைக்கலம் அடையவும், பாதுகாவலியும், முன்மாதிரியும், வழிகாட்டியுமாகப் புனித அல்போன்சாவை எங்களுக்குத் தந்ததற்காக உமக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். உம்மிடமுள்ள அன்பினால் வாழ்க்கை முழுவதையும் பலியாக அர்ப்பணித்து அன்றாடம் தனது வாழ்வில் எழுந்த துன்பங்களை எல்லாம் அன்பின் அடையாளமாக ஏற்று வாழ்ந்தப் புனித அல்போன்சாவைப் போல, எங்களை முழுவதுமாக உம்மிடம் அர்ப்பணிக்க எங்களுக்கு உமது அருளைத் தாரும். உம்முடையப் பாதுகாப்பைத் தேடும் எங்களுக்கு ஆன்ம உடல் நலன்களை அருளி எங்களை ஆசீர்வதித்தருளும். உம்முடைய மாட்சிக்கும், புனிதர்களின் வணக்கத்திற்கும், எங்களுடைய அனைத்து நன்மைகளுக்குமாக புனித அல்போன்சா வழியாக நாங்கள் நடத்தும் இந்த நவநாள் செபத்தை பக்தியோடும், கவனத்தோடும், தூய உள்ளத்தோடும் ஒப்புக்கொடுக்க எங்களைத் தகுதியுடையவர்களாக மாற்றியருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

## மன்றாட்டுகள்

முத : இங்கு கூடியுள்ள நாம் அனைவரும் மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும், மிகுந்த எதிர்பார்ப்புடனும் புனித அல்போன்சாவின் பரிந்துரைக்காக பக்தியுடன் மன்றாடுவோமாக.

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : இறையன்பால் எரிகின்ற இதயத்தோடு அனைவரையும் அன்பு செய்து, உமது வாழ்வில் ஏற்பட்ட வேதனைகளை மனதார ஏற்று மன்னித்த எங்கள் அன்னையாம் அல்போன்சாவே, நாங்களும் எங்களுக்கு எதிராகச் செயல்படும் அனைவரையும் மன்னித்து, அவர்களை அன்பு செய்ய மன வலிமையைப் இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : எங்கள் அன்றாட வாழ்வில் எழும் துயரங்கள், துன்பங்கள், வேதனைகள், இழப்புகள் அனைத்தையும் முழு மனதோடு ஏற்கும் மனநிலையையும், தோல்விகள் வரும் போது மனம் தளராமல் வாழ மனவுறுதியையும் இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : எல்லா கிறிஸ்தவர்களும், குறிப்பாக இளைஞர்கள், தங்களது இறை நம்பிக்கையிலிருந்து பிறழாமல், தங்களது வாழ்வாலும், நற்செயல்களாலும், இறை வார்த்தைக்கு சாட்சியாக வாழ்ந்திடும் வரத்தை இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : எங்கள் நாட்டுத் தலைவர்களும், அரசியல்வாதிகளும், அரசு அதிகாரிகளும், தங்கள் சுயநலப்போக்கைக் களைந்து, நாட்டு மக்களின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் ஏற்றத் திட்டங்களை செயல்படுத்தி, தன்னலமின்றி உழைக்கும் நல்ல மனதை இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவறத்தார், இறை மக்கள் மற்றும் இறைத்தூதுப் பணியாளர்கள் அனைவரும் தங்கள் பெற்ற அழைப்புக்கு ஏற்ப வாழவும், தங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்காக இறுதி வரை ஈடுபட்டு உழைக்கத் தேவையான அருளை இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : எங்கள் குடும்பங்களில் வாழும் அனைவரையும் ஆசீர்வதித்து, அவர்களில் ஆழ்ந்த நம்பிக்கையும், ஈடுபாட்டு உணர்வையும் வளர்த்து, தங்கள் குடும்பங்களில் நல்லுறவோடும் சமாதானத்தோடும் ஒன்றித்து வாழ அருளை இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : மக்கள் அனைவரையும், இந்தச் சமூகத்தில் நிலவும் தீமைகளான போதை பழக்கங்கள், பழிவாங்கும் உணர்வுகள், சுரண்டல், ஏமாற்றுதல், பாலியல், வன்முறை, கருக்கலைப்பு, கொலை, பேராசை, சிற்றின்பச் செயல்கள் போன்றவற்றில் மூழ்கி, தங்களது வாழ்வை இழக்கும் பேராபத்துகளிலிருந்து விடுபடும் வரத்தை இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : மனித நேயம் தளைக்கவும், மண் செழிப்புறவும், நாங்கள் தொடங்கும் செயல்கள் வெற்றி பெறவும், வேண்டிய அருளை இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : வறுமைத் துயரங்கள் தீரவும், எங்களைவ வாட்டி வதைக்கும் நோய்கள் ஒழியவும், அனைவரும் நற்சுகம் பெற்று வாழவும், வேண்டிய அருளை இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : தூய ஆவியாரின் கொடைகளையும், கனிகளையும் பெற்று, இறை வழியில் இறை ஒளியோடு வாழ, வேண்டிய அருளை இறைவனிடமிருந்து பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : நமது சொந்தத் தேவைகளுக்காக மௌனமாக மன்றாடுவோம்...
நாங்கள் வேண்டிய அனைத்தையும் இறைவனின் திருவுளப்படி எங்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்று...

எல் : புனித அல்போன்சாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : எங்கள் ஆண்டவராகிய இறைவா, புனித அல்போன்சாவின் தூய வாழ்வு வழியாகவும், அவருடைய இடைவிடாத பரிந்துரையாலும், எங்கள் வாழ்வுக்குத் தேவையானவற்றை உமது பாதத்தில் மிகுந்த நம்பிக்கையுடன் ஒப்படைத்திருக்கின்றோம். எங்கள் பாவங்களை எல்லாம் மன்னித்து, எங்கள் மன்றாட்டுகளுக்குக் கனிவாய் செவிசாய்த்து எங்களை நிறைவாக ஆசீர்வதித்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியா உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

# புனித அல்போன்சா நோக்கி மன்றாட்டு

(எல்லோரும் சேர்ந்து சொல்லவும்)

ஓ புனித அல்போன்சாம்மாவே! தூய வாழ்வின் முன்மாதிரியே! துறவியர்களின் கலங்கரையே! துன்பங்களால் புடமிடப்பட்டவரே! கோதுமை மணி போல அரைக்கப் பட்டு, உம்மையே இயேசு வாழும் அப்பமாக மாற்றத் துணிந்தவரே! இந்தியத் திரு அவையின் பெருமைமிக்கப் புனிதையே! நாங்கள் உம்மை வாழ்த்தி வணங்கிப் போற்றுகிறோம். உம்மால் நாங்கள் இதுவரை பெற்ற அனைத்து நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். உமது அர்ப்பணமிக்க எளிய வாழ்வின் பொருட்டு, நன்மைகள் செய்யும் நல்ல உள்ளத்தை இறைவன் உமக்கு வழங்கியுள்ளார் என்பதை நாங்கள் நன்கறிவோம்.

ஏழைகளின் ஏந்தலே! துயரப்படுவோரின் துணையாளரே! நன்மை செய்யத் துணிவோருக்கு நல்வழிகாட்டியே! நாங்கள் உம்மை நம்பி நாடி ஓடி வந்துள்ளோம். கவலையோடும், கண்ணீரோடும், கலக்கத்தோடும் வந்துள்ள எங்களுக்கு ஆறுதல் தாரும். அமைதியின்றி, ஆதரவின்றி வந்துள்ள உம் பிள்ளைகளை கண்ணோக்கிப் பாரும். எங்களை உம் கருணைக் கரங்களால் அரவணைத்தருளும். வறுமையாலும், நோய்களாலும், தனிமையாலும், முதுமையாலும், முன்னேற வழியின்றி முடங்கிக் கிடக்கும் நாங்கள், உம் முன் வந்து முழந்தாளிட்டுள்ளோம்.

அழுகின்ற எங்கள் முகத்தை நீர் பாராமல் இருப்பீரோ?
வடிகின்ற எங்கள் கண்ணீரை நீர் துடைக்காமல் இருப்பீரோ?
வீழ்கின்ற எங்கள் வாழ்வை நீர் தூக்காமல் இருப்பீரோ?
விம்முகின்ற எங்கள் இதயத்தை நீர் தேற்றாமல் இருப்பீரோ?

வீழ்த்துகின்ற எங்கள் வேதனைகளை நீர் தீர்க்காமல் இருப்பீரோ?
எங்கள் பெருமையும், பேரானந்தமுமானப் புனிதையே!
வாடி விழும் எங்கள் வாழ்வை வாடா மலராக்கும்.
தேடி வரும் உம் சொந்தங்களை வற்றாத அன்பால் தேற்றும்.
நாடி வரும் எல்லோருக்கும் நல்வாழ்வு தந்து வழிகாட்டும்.
ஆறாத் துயரிலும் மாறா அன்பில் வாழ்ந்தப் புனிதையே!
உம்மை நம்பி வந்த எங்களுக்காக எப்போதும் இறைவனை மன்றாடும். ஆமென்.

முத : நிறையன்பின் ஊற்றாகிய இறைவா, புனித அல்போன்சா வழியாக நீர் எங்களுக்கு வழங்கி வரும் உமது அன்பு நிறைந்த ஆசீருக்கு எங்கள் இதயம் கனிந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றோம். எல்லையில்லாத உமது அன்புத் துணையால் நாங்களும் அவரைப் போலத் தூய வாழ்வு வாழச் செய்தருளும். தூய ஆவியால் எங்களை நிரப்பி, அன்றாடம் நாங்கள் சந்திக்கும் மக்களுக்கும், உமது நீதி சார்ந்த அன்பிற்கும் சாட்சியாக வாழ்ந்திட அருள் புரியும். இந்த நவநாள் செபத்தில் பங்கு பெற்றவர்களுக்காகவும், எங்கள் பங்கு மக்களுக்காகவும் சிறப்பாக மன்றாடுகிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் என்றென்றும் இருப்பதாக. தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.

எல் : ஆமென்.

**********